CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# திவிநெகுமசட்டமூலம் பற்றியகுறிப்பு

**மாற்றுக்கொள்கைகளுக்கானநிலையத்தினால் 2012 செப்டெம்பர்**

அரசாங்கத்தினால் 2012 ஆகஸ்ட் 10ஆந் திகதி திவிநெகும சட்டமூலம் (இதனகத்துக் கீழே சட்டமூலம் என குறிப்பிடப்படுகின்றது) பாராளுமன்றத்தின் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் (மா.கொ.நி.) அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் இச்சட்டமூலத்தின் ஏற்பாடுகளை உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தினார். (எஸ்சீ/எஸ்டி5/2012) உயர் நீதிமன்றத்தில் வேறு 2 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. ஆகஸ்ட் 27 மற்றும் 28ஆந் திகதிகளில் உயர் நீதிமன்றத்தினால் மேற்படி மனுக்கள் விசாரிக்கப்பட்டதோடு உரிய விடயம் சம்பந்தப்பட்ட அதன் தீர்மானத்தை 2012 செப்டெம்பர் 18ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் மனுவின் மூலம் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக இணக்கப்பாடு காட்டப்படுவதோடு அரசியலமைப்பின் 154(எ)3 பிரிவின் படி மாகாண சபை நிரலுக்குரிய விடயங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதோடு அத்தகைய சட்டமூலமொன்றினை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு முன்னர் மத்திய அரசாங்கமானது மாகாண சபைகளுடன் கலந்துரையாடுவது கட்டாயமாகும்.

வறுமையை மட்டுப்படுத்தவோ சமுர்த்தி அதிகாரசபை ஊழியர்கள், மலையக மற்றும் தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கும் ஏனைய அரசாங்க உத்தியோத்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், ஓய்வூதியங்களை பெற்றுக் கொடுப்பதோ இந்த சட்டமூலத்திற்கு சவாலாக அமையாது என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முதலில் கூறிக்கொள்ள விரும்புகிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இவற்றை முக்கியமான பிரச்சனைகளாக இனங்காண்பதோடு இலங்கையில் பின்பற்றப்படுகின்ற சட்டபூர்வமான சட்ட வலையமைப்பின் மூலம் கடைப்பிடிப்பதையும் ஆதரிக்கும். மாகாண சபையின் அதிகாரங்களை வன்முறைகளின் மூலம் எடுக்க முயற்சிப்பதையும் வரையறுக்கப்பட்ட சோதனைகளையும் சமநிலைகளையும் ஒரு அமைச்சரின் கீழ் அதிகாரங்களைப் பலப்படுத்துவதையும் எதிர்ப்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சவாலாக கொண்டிருந்தது.

சட்டமூலத்தின் பிரதான ஏற்பாடுகள் மற்றும் அது இயற்றப்படுமானால் ஏற்படும் தாக்கம் என்பவை தொடர்பாக அடிப்படையிலான வழிகாட்டலொன்றை பெற்றுக்கொடுப்பதற்காக மாற்றுக் கொள்கை நிலையத்தினால் இக்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தின் ஏற்பாடுகளின் மூலம் பல்வேறுபட்ட பல துறைகள் மீது தாக்கம் ஏற்படுத்தப்பட்டாலும் இக்குறிப்பின் மூலம் அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஏற்படுத்தப்படுகின்ற தாக்கம் தொடர்பாகவே பிரதானமாக கவனஞ் செலுத்தப்படுகின்றது. இக்குறிப்பு மற்றும் சட்டமூலம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகள் என்பன மூலம் சட்டத்தின் விடயப்பரப்பு மற்றும் அது அதிகாரப் பகிர்வு நிருவாகம் மற்றும் மனித உரிமைகள் மீது எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாக மக்களுக்கும் உரிய தரப்பினருக்கும் இடையில் விழிப்புணர்வூட்டலை ஏற்படுத்தும் என்பது மாற்றுக் கொள்கை நிலையத்தின் கருத்தாகும்.

1. சட்டமூலத்தின் மூலம் தாபிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் நிறுவனங்கள்

கிழேதரப்பட்டுள்ள குறிப்பில் விபரிக்கப்பட்டுள்ளவாறு இச்சட்டமூலத்தின் மூலம் சில நிறுவனங்கள் தாபிக்கப்படுவதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது. பிரதானமாக கவனஞ்செலுத்தப்பட வேண்டிய துறையானது திவிநெகும அபிவிருத்தித் திணைக்களமாகும் (4, 5 மற்றும் 6ஆம் பிரிவுகள்),திவிநெகுமமாவட்டக் குழுக்கள் (20, 21 மற்றும் 22ஆம் பிரிவுகள்),திவிநெகும வலைய அமைப்புக்கள் (16, 17 மற்றும் 18ஆம் பிரிவுகள்) மற்றும் திவிநெகும சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் (10, 11 மற்றும் 12ஆம் பிரிவுகள்)ஆகிய பரந்த விடயத்துறைகளில் பல விடயங்கள் உள்வாங்கப்படுகின்ற நிறுவனங்களின் நோக்கங்கள் அதிகாரங்கள் மற்றும் பணிகளாகும்.

அமைச்சர்

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் (4, 5 மற்றும் 6ஆம் பிரிவுகள்)

திவிநெகுமதேசிய சபை (7 மற்றும் 42ஆம் பிரிவுகள்)

திவிநெகுமசம்மேளனம் (23 மற்றும் 24ஆம் பிரிவுகள்)

சமுதாய அடிப்படையிலான வங்கிகளினதும் வங்கிச் சங்கங்களினதும் முகாமைத்துவ சபை (33 ஆம் பிரிவு)

திவிநெகுமமாவட்டக் குழுக்கள் (20, 21 மற்றும் 22ஆம் பிரிவுகள்)

சமுதாய அடிப்படையிலான வங்கிச் சங்கங்கள் (30, 31 மற்றும் 32ஆம் பிரிவுகள்)

திவிநெகும சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் (10, 11 மற்றும் 12ஆம் பிரிவுகள்)

சமுதாய அடிப்படையிலான வங்கிகள் (26, 27 மற்றும் 28ஆம் பிரிவுகள்)

2. அதிகாரப் பகிர்வின் மீதானதாக்கம்

மனுதாரர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபை நிரலுக்குள் வருகின்ற பல விடயங்கள் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கியுள்ளன. அரசியலமைப்புக்கான 13ஆம் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல விடயங்களை இதன் மூலம் சுவீகரித்துக் கொள்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு இயலுமை ஏற்படுகின்றது.

மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டு அதிகாரம் பகிரப்பட்ட விடயங்களின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றதான இச்சட்ட மூலத்தில் உள்ளடங்கியுள்ள பல்வேறுபட்ட பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| **சட்டத்தின் பிரிவு** | **அரசியலமைப்பின் 9ஆம் அட்டவணையின் 1ஆம் நிரலில் உரியவிடயம் (மாகாண சபை நிரல்)** |
|---|---|
| 4(அ) பிரிவு<br>வறுமையை ஒழித்தல் மற்றும் சமூகநீதியை உறுதிப்படுத்துகின்றதான சமூகமொன்றை உருவாக்குவதற்காக தேவைப்படக்கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்<br>(திவிநெகுமஅபிவிருத்திதிணைக்களம்) | விடய இலக்கம் 2 –திட்டங்கள் -<br>மாகாணங்களுக்கான பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>விடய இலக்கம் 10 – கிராமஅபிவிருத்தி |
| 4(இ) பிரிவு<br>ஒவ்வொருநபர்சார்பாகவும் குடும்பம் சார்பாகவும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் | விடய இலக்கம் 16 –<br>மாகாணத்திற்குள் உணவுவழங்கல் மற்றும் விநியோகிக்கப்படுதல் |
| பிரிவு4<br>மக்களின் வாழ்வாதார அபிவிருத்தித் தேவைப்படக்கூடிய பௌதீக மற்றும் | விடய இலக்கம் 5.3 –<br>மாகாணசபை நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் சம்பந்தப்பட்ட நிர்மாணப் பணிகள். |

| | |
|---|---|
| சமூகஉட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல் (திவிநெகுமஅபிவிருத்தித் திணைக்களம்) | விடய இலக்கம் 6 – மாகாணத்திற்குள்ளான வீதிகள்,பாலங்கள் மற்றும் சந்தைகள் |
| 4(ஐ)<br>சமூகப் பாதுகாவலர்கள் தேவைப்படும் ஆட்களுக்காக பாதுகாப்பு வலையமைப்பு ஒன்றை உருவாக்குதல் | |
| திவிநெகுமஅபிவிருத்திதிணைக்களம் | விடய இலக்கம் 7.2 –<br>அநாதைகள் மற்றும் குடும்பங்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்துதல்.<br>விடய இலக்கம் 7.3 –<br>உடல்,உளமற்றும் சமூகரீதியில் அங்கவீனமுற்றோருக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களது நலனோம்பல்.<br>விடய இலக்கம் 7.4–<br>பலவீனம் மற்றும் சேவையில் ஈடுபடுத்தமுடியாதவர்களுக்குசலுகைகளைவழங்குதல் |
| 5(இ)<br>திவிநெகும பயன்பெறுவோரின் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் தயாரிப்புக்கான நிலையங்களை ஏற்படுத்தல் மற்றும் அதன் விடயங்களுக்காக பௌதீக மற்றும் நிதிவளங்களை வழங்குதல். (திவிநெகும அபிவிருத்த ிதிணைக்களம்) | விடய இலக்கம் 15 –<br>வர்த்தகநிலையங்கள் பொதுச்சந்தைகள் |
| 5(ஒ)<br>மக்களின் வாழ்வாதாரத்தை பொருளாதார மற்றும் சமூகரீதியாக உயர்த்துவதற்காக அதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுவதற்காக அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல் (திவிநெகும அபிவிருத்தி திணைக்களம்) | விடய இலக்கம் 2 –<br>திட்டமிடல் மாகாணங்களுக்கான பொருளாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>விடய இலக்கம் 5.3 –<br>மாகாணசபைகள் பட்டியலில் காட்டப்பட:டுள்ளவிடயங்களுடன் தொடர்புபட்டநிர்மாணப் பணிகள் |

| | |
|---|---|
| | விடய இலக்கம் 6 –<br>மாகாணத்தில் உள்ளபாதைகள், பாலங்கள், இறங்குதுறைகள்<br>விடய இலக்கம் 10 –<br>கிராமியஅபிவிருத்தி |
| 9<br>சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் | விடய இலக்கம் 17.1 –<br>கூட்டுறவு மற்றும் மாகாணத்தில் கூட்டுறவுசங்க அமைப்பு பதிவுசெய்தல், மேற்பார்வை, கணக்காய்வு<br>விடய இலக்கம் 17.2 –<br>மாகாணத்தில் கூட்டுறவு அபிவிருத்தி<br>விடய இலக்கம் 28 –<br>கட்டமைக்கப்படாத வர்த்தக, இலக்கிய, விஞ்ஞான, சமய மற்றும் வேறு சங்கங்களும் அவற்றை முறைப்படுத்தலும் |
| 11(ஒ)<br>சமூகமனிதவலுபங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தல் | விடய இலக்கம் 2 –<br>திட்டமிடல் மாகாணங்களுக்கான,பொருளாதார திட்டங்களைநடைமுறைப்படுத்தல்<br>விடய இலக்கம் 10 –<br>கிராமஅபிவிருத்தி |
| 15(1)<br>திவிநெகுமபிரதேசஅமைப்புக்கள் | விடய இலக்கம் 17.1 –<br>கூட்டுறவு அமைப்பு மற்றும் மாகாணங்களுக்குள் கூட்டுறவுசங்க அமைப்புக்களை பதிவுசெய்தல் மேற்பார்வை,கணக்காய்வு செய்தல்<br>விடய இலக்கம் 17.2 –<br>மாகாணங்களுக்குள் கூட்டுறவுஅபிவிருத்தி<br>விடய இலக்கம் 28 –<br>கட்டமைக்கப்படாத வர்த்தக, இலக்கிய,விஞ்ஞான,சமய மற்றும் வேறு சங்கங்களை, அமைப்புக்களை முறைப்படுத்தல். |
| 17(இ) | விடய இலக்கம் 9 – |

| | |
|---|---|
| பிரதேசத்திற்குள் தமது பயன்பெறுவோரினை விவசாய அல்லது வேறு உற்பத்திகளை மேம்படுத்துவதற்குதேவையானதொழில்நுட்ப உதவிகள் மற்றும் வேறுஉதவிகள் வழங்கல் | மாகாணவிடயங்களுக்காகவிவசாயகருத்திட்டங்கள், மேம்படுத்தல் மற்றும் கல்வி, விவசாயசேவைகள் உட்படவிவசாயம். |
| 17 (ஈ)<br>உற்பத்திகள், மூலப்பொருட்கள் கொள்வனவு களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் நிலைகளை பேணுதல், விஞ்ஞானநிலையங்கள் மற்றும் நவீனசந்தைத் தொகுதிகளை ஒழுங்குசெய்தல்<br>(தவிநெகுமபிரதேசஅமைப்புகள்) | விடய இலக்கம் 15 –<br>வர்த்தகசந்தைகள் மற்றும் வாராந்தபொதுச் சந்தைகள் |
| 18 (இ)<br>பிரதேசஅடிப்படையில் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக மூலப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பம் உட்பட வேறு தொடர்புபட்ட சேவைகளை வழங்குதல் மற்றும் அந்த உற்பத்திகளை சந்தைப்படுத்தல் அந்த சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்<br>(திவிநெகுமபிரதேசஅமைப்புக்கள்) | விடய இலக்கம் 10 –<br>கிராமஅபிவிருத்தி<br>விடய இலக்கம் 15 –<br>சந்தைவசதிகள், பொதுச்சந்தைகள்<br>விடய இலக்கம் 21 –<br>அபிவிருத்திமற்றும் திட்டமிடல் தொடர்பான தேசியகொள்கைத் திட்டத்தைதயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடாபான விவசாய கைத்தொழில், வர்த்தக, சந்தைதொழில் முயற்சிகள் மற்றும் வேறுவருமானங்களைசம்பாதிக்கும் கருத்திட்டங்கள், அத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசுக்கும் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் இருக்கும் அதிகாரங்களுக்கு தீங்கு ஏற்படாத வகையில் மாகாணத்துக்குள் மேம்படுத்துவதற்காக அவற்றை நிறுவுதலும் அவற்றில் ஈடுபடுவதற்கான அதிகாரங்களும் |
| 18 (ஈ)<br>திவிநெகுமசமூகஅடிப்படை அமைப்புக்களினால் நடைமுறைப் படுத்தப்படும் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித் | விடய இலக்கம் 7.3 –<br>உளரீதியான உடலரீதியான மற்றும் சமூகரீதியான அங்கவீனம் அடைந்தவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களின் நலன்புரி |

| | |
|---|---|
| திட்டங்களுக்காக ஒத்துழைப்பு வழங்குதல் (திவிநெகுமபிரதேசஅமைப்புக்கள்) | விடய இலக்கம் 7.4 — பலவீனமானமற்றும் தொழிலில் ஈடுபட முடியாதவர்களுக்கு நிவாரணங்களைவழங்குதல் |
| 26 திவிநெகுமபயன பெறுவோர்களுக்கான கடன் வசதிகளை வழங்குதல் (திவிநெகுமசமூகஅடிப்படைவங்கிகள்) | விடய இலக்கம் 35 — பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டஏதேனும் சட்டம் மூலம் அல்லதுசட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள அளவுக்கு கடன் பெறுதல் |
| 31(ஆ) அதில் நிதிகளைமுதலீடுசெய்தல் கடன் வசதிகளை வழங்குதல் இலாபங்களை செலுத்துதல் | விடய இலக்கம் 35 — பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டங்களினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள அளவுக்கு பணம் கடனாக பெறுதல் |

1. எஸ்சீ/எஸ்டி/2012மற்றும் எஸ்சீ/எஸ்டி. 02/2012

2. மனுவுக்கான மேலதிக ஆவணங்கள் தேவைப்படும் பட்சத்தில் தயவு செய்து மாற்றுக்கொள்கை நிலையத்தினை தொடர்புகொள்ளவும்.

3. இந்த அட்டவணையானது எஸ்டி/எஸ்டி03/2012ஆகியவழக்கில் கோப்பிடப்பட்ட எழுத்து மூலமான சமர்ப்புரைகளிலும் உள்ளடங்கியுள்ளதோடு உயர்நீதிமன்றத் தீர்ப்பிலும் இந்த அட்டவணையிலுள்ள விடயங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**மாற்றுக்கொள்கைகளுக்கானநிலையம்**

மாற்றுக்கொள்கைகளுக்கானநிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக அரசாங்கம், முரண்பாடுகளைத் தீர்த்தல் அதனுடன் இணைந்த முரண்பாடுகள் மீது அவதானம் செலுத்தும். பொதுமக்களின் கொள்கை தொடர்பான சம்பாக்ஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப் படுவதாலும், அதைப் பலப்படுத்தவேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும் 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொதுமக்களின் கொள்கை விமர்சன ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்றுவழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு ,அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

விலாசம்: 24ஃ2, 28வது ஒழுங்கை, ப்.ஃ.ளவர்வீதி, கொழும்பு - 07
தொலைபேசி: *+94(11) 2565304/5/6*
ஃ.பக்ஸ: *+94(11) 4714460*
இணையதளம் : *www.cpalanka.org*
மின் அஞ்சல் : info@cpalanka.org